# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of civil procedure)

IN THE COURT OF SUBORDINATE JUDGE,

KEERANUR

CASE NO.OS.No. 1 /2021

Depostition of witness of plaintiff – P.W.1

03.08.2023

| | | |
|---|---|---|
| Name | : | திருமலை |
| Father Name | : | முருகன் |
| Village | : | காளப்பனூர் |
| Taluk | : | |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 03rd day of August 2023.

**சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

| | | | |
|---|---|---|---|
| 1. | 28.03.1996 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் | வா.சா.ஆ.1 |
| 2. | 18.07.2014 | எனது தகப்பனாருக்கு 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் அசல் | வா.சா.ஆ.2 |
| 3. | 02.03.2015 | 1ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதியிடம் இருந்து ஆவண எண்.1653/2014 என்ற ஆவணத்தின் குறைவு முத்திரை தீர்வை செலுத்தக்கோரி அனுப்பப்பட்ட அறிவிப்பு | வா.சா.ஆ.3 |
| 4. | 18.07.2014 | முத்திரை தீர்வை செலுத்தியதற்கான ரசீது | வா.சா.ஆ.4 |
| 5. | 14.01.2019 | எனது தகப்பனாரின் இறப்புச்சான்றிதழ் | வா.சா.ஆ.5 |
| 6. | | எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் இணையத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது | வா.சா.ஆ.6 |
| 7. | | எனது பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை 2 | வா.சா.ஆ.7 |
| 8 | 31.07.2021 | எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது | வா.சா.ஆ.8 |
| 9 | | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் | வா.சா.ஆ.9 |

| | | | |
|---|---|---|---|
| | | இணையத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது | |
| 10 | 06.08.2014 | தானசெட்டில் மெண்ட் ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.10 |
| 11. | 11.06.2021 | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானசெட்டில் மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.11 |
| 12. | 16.06.2021 | பிரதிவாதிகள் மற்றும் மாவட்ட பதிவாளருக்கு நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் | வா.சா.ஆ.12 |
| 13 | | மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் மற்றும் மாவட்ட பதிவாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் எண்ணிக்கை 4 | வா.சா.ஆ.13 |
| 14. | 30.06.2021 | 1,2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு | வா.சா.ஆ.14 |
| 15 | 12.08.2021 | விராலிமலை காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனுவின் கைநகல் | வா.சா.ஆ.15 |

**(தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.)**

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்ன பரிகாரம் கேட்டு யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பா சொத்து எங்களுக்குதான் பாத்தியம் என்று எனது சித்தப்பா மற்றும் பாட்டி ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 3ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் முன்னறிவிப்பு இல்லாமல் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துள்ளார். அதனால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளோம். தாவா சொத்து எனது அப்பாவிற்கு எவ்வாறு பாத்தியம் என்றால் எனது பாட்டி எனது அப்பாவிற்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார். எனது அப்பாவிற்கு எனது பாட்டி முத்தம்மாள் 18.07.2014ம் தேதி செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை 06.08.2014ம் தேதி முத்தம்மாள் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு தாவா சொத்தை பொறுத்து 09.10.2014ம் தேதி 2ம் பிரதிவாதியான எனது சித்தப்பா பெயருக்கு எனது பாட்டி செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் இந்த வழக்கை 2021ம் ஆண்டுதான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ரத்து பத்திரம் தொடர்பாக 3ம் பிரதிவாதிக்கு நாங்கள் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த பிறகு தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்கம் ஏற்படுத்தக்கூடாது என சார்பதிவாளருக்கு தடங்கல் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். முறையான ஆவணங்களை பரிசீலித்தும் தரப்பினரை விசாரித்தும்தான்

சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவிற்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்றால் சரியல்ல. 09.10.2014 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் முறையான ஆவணங்களை பரிசீலித்தும் தரப்பினரை விசாரித்தும்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆவணங்கள் முறையாக பரிசீலனை செய்து பதிவு செய்யப்பட்டுள்ளதால் 3 ம் பிரதிவாதிக்கு எதிராக நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சி தலைவரை வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தால் இவ்வழக்கு நிலைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. 2014 ம் ஆண்டு ஏற்பட்ட ஆவணங்களை பொறுத்து 2021 ம் ஆண்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் அதனால் எங்கள் வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை. )